**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 27-2022**

**Prosecution witness : அ.சா. 6** **Date : 14.06.2024**

| | |
|---|---|
| **Name : ரேனுகா சக்கரவர்த்தி** | **Caste :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Religion :** |
| **Taluk :** | **Age :** |

**(Accused 1,2,3 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் தற்போது மேச்சேரி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 2021-ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, கடந்த 31.10.2021-ம் தேதி சேலம் அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலின் பேரில் உதவி ஆய்வாளர் சாந்தி உத்தரவின் பேரில் நான் சேலம் அரசு மருத்துவமனை சென்று மயிலி (50) க/பெ மாரியன்னன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்தை உதவி ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். பின்னர் விசாரணைக்கு பிறகு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டதாக தெரிந்துகொண்டேன். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-** இல்லை.

ஒம்/- தே.மயில்சாமி,
நீதித்துறை நடுவர் எண்.2,
மேட்டூர்.